# சமூக ஒளி

# SAMUUKA OLI

இதழ் 07

1995/1996

The Journal of
**Social Science Union**
**University of Jaffna.**

## சமூக விஞ்ஞான மன்றம்

பொருளியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

# சமூக ஒளி
# SAMUUKA OLI

இதழ் 07 1995/96 Vol. 07

இணை ஆசிரியர்கள்:
T. [illegible]
N. இந்திரராசா
T. கிருஷ்ணகுமார்

சமூக விஞ்ஞான மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# GATT மற்றும் WTO ன் தோற்றம், நோக்கம், செயற்பாடு.

## - சிறு ஆய்வு -

# A Brief Study of the Origin Objectives and Activities of the GATT and the WTO

( திரு. S. S. உதயகுமார் )

இரண்டாம் உலக யுத்தத்தின் விளைவால் நாடுகள் எதிர்நோக்கிய சீரழிவில் இருந்து அவற்றை மீட்டெடுத்து சர்வதேச ரீதியில் பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்பும் நோக்கில் 1947களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலாபலனாக 1948இல் அமுலுக்கு வந்த ஒரு பல்பக்க உடன்படிக்கையே ''வரிகள், சுங்கத்தீர்வைகள் மற்றும் வியாபாரம் என்பன தொடர்பான பொது உடன்பாட்டு அமைப்பு (GATT) ஆகும். இவ்வாறு உருவாக்கப்பட்ட GATT (General Agreement of Trade and Tariff - GATT) என்ற அமைப்பினால் சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்டு வந்த தடைகளை முற்றாக நீக்கிவிடும் நோக்கில் பல வர்த்தகம் தொடர்பான சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது. இந்த வகையில் இறுதியாக 1986 இற்கும் 1994 இற்கும் இடையில் உருகுவேயில் நடைபெற்ற எட்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் விளைவாக 1995 ஜனவரி தொடக்கம் மேற்படி GATT அமைப்பின் மறுவடிவமாக உருவாக்கப்பட்டதே'' உலக வர்த்தக நிறுவனம் (World Trade Organization - WTO) ஆகும். எனவே இத்தகைய GATT அமைப்பினதும் அதன் மறுவடிவமான WTO வினதும் தோற்றம், நோக்கம், செயற்பாடு பற்றி மிகவும் சுருக்கமாக ஆராயப்படுகின்றது.

GATT என்ற பொது உடன்பாட்டு அமைப்பினை நோக்குமிடத்து அது ஒரு நிறுவனமல்லாத சட்டபூர்வ ஒப்பந்தமாக உள்ளது. அந்த வகையில் 1947களில் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று பல அரசுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1948 ஆம் ஆண்டு தொடக்கம் அமுலுக்கு வந்த ஒரு பல்பக்க உடன்படிக்கையே GATT எனலாம். குறிப்பாக 2ம் உலக யுத்தத்தால் சீரழிவுக்குட்பட்ட நாடுகளின் புனருத்தாரணத்துக்கும் அபிவிருத்திக்கும் என பிரிட்டன் வூட்ஸ்( Briton Woods ) முறையினால் உத்தேசிக்கப்பட்டிருந்த சர்வதேச வர்த்தக நிறுவனத்திற்கான வலுவான பட்டயம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புக் காணப்பட்டது. இதனால் வரையறைக்குட்பட்ட சில ஏற்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. எனினும் ஐக்கிய அமெரிக்காவின் உறுதிப்படுத்தலைப் பெற முடியாத நிலை காணப்பட்டது. இதனால் மேற்கொள்ளப்பட இருந்த சர்வதேச வர்த்தக நிறுவனத்திற்கான திட்டங்களைக் கைவிட நேரிட்டது. இதன் விளைவால் இந்த GATT

திரு. எஸ். எஸ். உதயகுமார்
B. A. (Hons) யாழ்ப்பாணம்.
தற்காலிக விரிவுரையாளர்
பொருளியல் துறை
யாழ். பல்கலைக் கழகம்.

உடன்படிக்கையானது தற்காலிகமானதாக இருந்த போதிலும் அனேகமான நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக விதிகளை விதந்துரைக்கும் தனியான ஒரு பல்பக்க அமைப்பாக இருந்தது.

இந்த GATT உடன்படிக்கையானது விதிமுறைகளின் தொகுப்பாக மாத்திரமன்றி வியாபாரம் தொடர்பான பிரச்சனைகளைக் கலந்துரையாடித் தீர்க்கக்கூடிய அரங்கமாகச் செயற்படுதல் நாடுகளுக்கிடையே சமமான கவனிப்பினை வழங்குவதனை உறுதி செய்யும் பொருட்டு வர்த்தகத் தடைகளையும் வர்த்தகம் தொடர்பான ஒரு தலைப்பட்சமான நிலைமைகளைக் குறைத்துவிடுதல், உலக வர்த்தகத்தைத் தாராளமயமாக்குவதோடு இதன் உதவியுடன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிக்கக்கூடிய வகையில் கைத்தொழில் மற்றும் வணிக நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கும் உதவி புரிதல் அல்லது வியாபாரம் செய்வதற்கும் தொழில்களை உருவாக்குவதற்கும் அது தொடர்பான நம்பிக்கையை வளர்ப்பதற்கும் உதவுதல் பல நோக்கங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

மேற்படி GATT அமைப்பில் உள்ள ஒவ்வொரு நாடும் ஏனைய அங்கத்துவ நாடுகளுக்கு தன் சந்தையினை சமமான முறையில் திறந்து விடுகின்றது. இந்த வகையில் குறிப்பிட்ட ஒவ்வொரு நாடும், வர்த்தகக் கூட்டாளிகளும் இணைந்து தீர்வை வெட்டு ஒன்றுக்கு உடன்படும் போது ''பெருமளவுக்கு விரும்பப்படும் நாடு'' என்ற கோட்பாட்டுக்கிணங்க சகல நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்படும். ஆகவே தான் இத்தகைய தடங்கல் அற்ற சந்தைச் சக்திகளின் தொழிற்பாட்டினாலும் சுதந்திரமான போட்டியாலும் சிறப்பான முறையில் கட்டற்ற வர்த்தகத்தை ஸ்தாபித்துக் கொள்ளலாம். எனக் கருதுவதோடு இதனை அதிகரிக்கும் விதமாக விதி முறைகள் உருவாக்கப்பட்டுள்ளதோடு பழைய கோட்பாடான ''நாடுகள் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி ஏற்றுமதிகளுக்கு மானியம் வழங்குவதன் மூலம் செழிப்பு நிலையினை அடைய முடியும்'' என்ற கருத்தினை நிராகரிக்கின்றது. இதனால் தான் இந்த அமைப்பின் விதிமுறைகள் கட்டற்ற போட்டியினைத் தாக்குப் பிடித்து நிற்கக்கூடிய நாடுகளுக்கு அல்லது வர்த்தகர்களுக்குச் சாதகமானதாக இருந்து வருகின்ற அதே நேரம் போட்டியிடும், ஆற்றல் செயற்றிறன் அற்ற நாடுகளுக்கு அல்லது வர்த்தகர்களுக்குப் பாதகமானவையாக அமைந்து விடுகின்றன என்றும் இதனால் சில வறிய நாடுகள் உலகின் சந்தைச் சக்திகளுக்கு ஈடு கொடுக்க முடியாது போகும் பட்சத்தில் மேலும் மோசமான வறுமைக்குத் தள்ளப்படும் என்றும் கருதப்படுகின்றது. ஆயினும் உறுப்பு நாடுகளுக்கு பல்பக்க ஒழுக்காற்றினை விதித்து வருவதும் அதே நேரம் இவற்றைக் கண்டிப்பான முறையில் பிரயோகிக்கப்படுமாயின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான விடயங்களில் தேசிய இறைமையைக் கூடப் புறக்கணித்து விடக்கூடிய தன்மையையும் கொண்டது என விமர்சிக்கப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும் இந்த உடன்படிக்கையானது காலத்திற்குக்காலம் பல்வேறு நாடுகளில் தனது செயற்பாடு பற்றி பல்வேறு சுற்றுப் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய GATT அமைப்பானது சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்டு வருகின்ற அரண்களை ( தடைகளை ) முற்றாக நீக்கிவிடும் அல்லது குறைத்துவிடும் நோக்கில் வர்த்தகம் தொடர்பான பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் முறையே 1947 இல் ஜெனிவாவில் முதலாவது சுற்றுப்பேச்சு வார்த்தையும் தொடர்ந்து

1949 இல் பிரான்ஸில் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையும், என்ற வகையில் தொடர்ந்து பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள், நடைபெற்று வந்து இறுதியில் எட்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை 1986 தொடக்கம் 1993 வரையான காலப் பகுதியில் உருகுவேயில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் உருகுவேயில் நடைபெற்ற எட்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை முக்கியத்துவம் பெறுகின்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறாக காலத்துக்குக் காலம் நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக வர்த்தகத் தடைகள் அதிக அளவிற்கு நீக்கப்பட்டதுடன் உலக வர்த்தகம் எதிர்நோக்கி வந்த பல பிரச்சனைகளும் ஓரளவு தணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் உதாரணமாக பிரதான கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் மீதான நிறைவேற்றப்பட்ட சராசரித் தீர்வையானது 1940 இல் 40% ஆக இருந்து தொடர்ந்து 1950 இல் 25% ஆகி பின் 1960 இல் 17% ஆகி 1970 இல் 12% ஆகி 1980 இல் 08% ஆகி 1990 இல் 4.7% என்ற வகையில் தொடர்ந்து குறைக்கப்பட்டு வந்துள்ளமையை அவதானிக்கலாம்.

இத்தகைய தாராள வர்த்தகத்தன்மை கொண்ட GATT என்ற அமைப்பு உருவாக்கப்பட்டமையைத் தொடர்ந்து கடந்த 50 வருடங்களில் வர்த்தகத்தின் அளவு 10 மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 1990 இல் வர்த்தகத்தின் பெறுமதி 3500 அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. இதில் 11% விவசாயப் பொருட்களும், 57% தொழில் சார்ந்த பொருட்களும் உள்ளடங்கும். இக் காலத்தில் இலங்கைப் பொருளாதாரமும் வர்த்தகத்தில் கணிசமான வளர்ச்சியை எதிர்நோக்கிய அதேவேளை கிழக்காசிய, தென்கிழக்காசிய நாடுகளின் துரித ஏற்றுமதி வழிப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் ஜப்பானின் திடீர் எழுச்சிக்கும் தென்கொரியா, கொங்கொங், தாய்வான், சிங்கப்பூர் போன்ற கிழக்காசியாவில் நான்கு வேங்கைகள் என அழைக்கப்படும் நாடுகள் புதிய கைத்தொழில்மய நாடுகளாக (NIC) மிளிரவும் இவ்வமைப்பினால் உருவாக்கப்பட்ட கட்டற்ற உலக வர்த்தகமும் துணை புரிந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் 1920, 1930 களில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு வாதம் உலக மந்தத்திற்குத் துணை போனது போன்று இந்த GATT உடன்படிக்கை உலகப் பொருளாதாரம் மீது பிரமாண்டமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதில் வளர்ந்த நாடுகள் கூடிய நன்மை பெற, வளரும் நாடுகள் பல அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமையும் காணப்படுவதற்கு இந்த அமைப்பின் ஒழுங்கு விதிகளில் உள்ள குறைபாடுகளே காரணமாகும். 1986 தொடக்கம் 1990 வரை இந்த அமைப்பைச் சேர்ந்த நாடுகளில் தாராள வர்த்தக நிலை காணப்பட்ட போதும் 45 நாடுகளில் 284 வகையான வர்த்தகத் தடைகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1964 தொடக்கம் 1967, 1973 தொடக்கம் 1979 வரையான காலப்பகுதிகளில் முறையே நடைபெற்ற கெனடி (Kennedy) - ரோக்கியோ (Tokyo) சுற்றுப் (Round) பேச்சுக்களைத் தொடர்ந்து அமெரிக்கா இவ் உடன்படிக்கை மீது சந்தேகம் கொண்டமையும், 1970 களில் எண்ணெய் விலை உயர்வும் டொலர் நாணயத்தின் திறனைக் குன்றச் செய்தது. இத்தகைய பின்னடைவு 1980 களில் பொருளாதாரப் பின்னடைவுக்குக் காரணமாகியது. எனவே இவை தொடர்பாக நடைபெற்ற ரோக்கியோ பேச்சுகள் பய

னற்றவையாக அமைந்தமை, சரியான வழியில் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டிய தேவையை ஏற்படுத்தியதோடு மட்டுமன்றி நாம் ஒரு பக்கச் சார்பான வர்த்தகக் கொள்கைகளை மேற்கொள்ள வேண்டி வரும் என்று அச்சுறுத்தியமையையும் தொடர்ந்து மற்றைய நாடுகள் அச்சத்துடன் தம் நிலைப்பாட்டை வெளிக்காட்டியது. இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே எட்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை உருகுவேயில் ஆரம்பமாகியது.

1986களிலிருந்து 1994கள் வரையான காலப்பகுதிக்குள் நடைபெற்ற உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அன்றைக்கான வரலாற்றில் நீண்ட காலம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையாகவும், அதே நேரம் முக்கியத்துவம் பெற்ற பேச்சுவார்த்தையாகவும் இது கருதப்படுகின்றது. இத்தகைய உருகுவே சுற்றுப்பேச்சுக்கள் முதலில் மந்திரிகளின் ஆலோசனைக் கூட்டமாகக் கூட்டப்பட்டது. இதில் விவசாயம், துணி என்பவற்றின் வர்த்தகம், சந்தைப்படுத்தல் போன்றன பற்றி விவாதிக்கப்பட்டன. 1990 இற்கு முன்னர் 15 உபபகுதிகளில் விவாதிக்கப்பட்டு இறுதியாக 07 பகுதிகளில் சேர்க்கப்பட்டன. இதன் விளைவாக இலகுவான சந்தைப்படுத்தல், குறைந்த தீர்வைகள், ஏற்கனவே இருந்த தீர்வைத் தடைகளைக் குறைத்தல் போன்றவை முக்கியம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட உருகுவே சுற்றுப்பேச்சுவார்த்தை முக்கியமானதும், விரிவானதும், பெருமளவு அபிலாசைகளைக் கொண்டதுமான ஒரு வர்த்தகத் தாராளமயப்படுத்தல் வழிமுறையாகக் கருதப்பட்டது.

1986களில் பொருளாதார செழிப்பு நிலையின் நம்பிக்கையோடு ஆரம்பிக்கப்பட்ட உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தை 1990களில் மந்தம், மற்றும் பாதுகாப்புவாத உண்மைகளைப் புலப்படுத்தி பல கசப்பான வாக்குவாதங்களைத் தூண்டியதோடு மட்டுமன்றி ஐரோப்பிய சமூகத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான மானியப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி விடயங்கள் பற்றி காரசாரமான வாதங்கள் ஏற்படத் துணைபோனது. இந்த உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்வதில் இதன் பணிப்பாளர் நாயகமான 'பீட்டர் சதர்லாண்ட்' மிக முக்கிய பங்கினை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பலனாக 1993 டிசம்பரில் ஓர் உடன்படிக்கைக்கு வந்தாலும் தேசிய அரசுகளால் அங்கீகரிக்கப்பட வேண்டிய தேவை முதலில் காணப்பட்டது. அடுத்ததாக 500 பக்கங்களைக் கொண்ட தீர்வை, கோட்டாவெட்டு தொடர்பான திரல்களை நிறைவு செய்வதற்கு ''நாட்டுக்கு நாடு'' என்றும் ''பண்டத்துக்குப்பண்டம்'' என்றும் உடன்படிக்கைகள் பேசித்தீர்க்கப்பட வேண்டிய தேவை காணப்பட்டது. இந்த வகையில் 1994 ஏப்ரலில் 125 நாடுகளினால் கைச்சாத்திடப்பட்ட இந்த உடன்படிக்கை 1995 ஜனவரி 01 தொடக்கம் அமுலுக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி,

- உற்பத்திப் பொருட்கள் மீதான தீர்வையை 2/3 பங்குக்குமேல் குறைத்தல்.
- 40% இற்கு மேலான பொருட்களை வரியில்லாமல் சந்தைப்படுத்த முடியும்.
- 06 வருடங்களில் விவசாய சம்பந்தமான வர்த்தக மானியங்கள், வர்த்தகத் தடைகள் என்பன நீக்கப்படும்,

- முதன் முதலாக தொழில் (வேலை) சார்ந்த, வர்த்தகத்தை அடிப்படை வர்த்தக விதிகளின் கீழ்க் கொண்டு வருதல் போன்றவற்றினை தன்ன கத்தே உள்ளடக்கியிருந்தது.

இத்தகைய உடன்படிக்கையின் மூலம் பொதுவாகச் சகல நாடுகளுக்கும் நன்மை கிடைக்கும் என்று ஆய்வாளர்கள் கூறி னாலும் வருமானம் குறைந்த நாடுகளுக் கும் ஏனைய நாடுகளுக்கும் கஷ்டங்கள் தோன்ற இடமுண்டு. இவ்வாறான கஷ் டங்கள் ஆனது தீர்வைச் சலுகைகள், உணவுப் பொருட்களுக்குரிய விலை என் பவற்றின் மூலம் பாதிப்பிற்குட்படவேண் டியுள்ளது.

இத்தகைய உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தை மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ற வகையில் முக்கிய மாக

- தீர்வையில் மேலும் பொருட்களை குறைத்து வருவதும், தீர்வையில்லாத தடைகளைக் குறைத்து விடுதலும்,

- குறிப்பாக சேவைகள், முதலீடுகள் மற்றும் அறிவுசார் சொத்துக்கள் போன்ற புதிய விடயங்களை இதன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருதல்,

- வேளாண்மை, புடவைகள் மற்றும் ஆடைகள் என்பவற்றை விதி முறை யின்கீழ் கொண்டு வருவதன் மூலம் உலகு தழுவிய வியாபாரப் பண்டங் களை உள்ளடக்குதல்,

- இந்த அமைப்பினை புதிய உலக வர்த்தக நிறுவனம் என்ற வகையில் நிலை மாற்றம் செய்வதன் மூலம் அதனைச் சீர்திருத்தி அமைப்பதுடன், இதன் அனுசரணையுடன் வர்த்தக உடன்படிக்கைகளைக் கண்காணிக் கவும், உறுப்பு அரசுகள் இடையே தகராறுகள் ஏற்படாது பார்த்துக் கொள்வதுடன் அவ்வாறு ஏற்படும் போது அவற்றைக் கண்காணித்து தீர்த்து வைக்கவும், அதிகரித்த அளவில் அதிகாரம் வழங்கல் என்ற வகையிலும் பல நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய வகையில் இப் பேச்சு அமைந்தது.

இந்த வகையில் பண்டம் மட்டுமன்றி, சேவைகள் விரிவாக்கம், சந்தைகள் பிரவேசம், கைத்தொழில் கொள்கை, மானியம் தொடர்பான கொள்கை, புடவைகள், ஆடைகள் வர்த்தகம் போன் றவைகூட இதன் கட்டுப்பாட்டில் வந்த துடன் (கைத்தறி உற்பத்தி தவிர), வேளாண்மை வர்த்தகம் கூட பாதுகாப்பு வாதம் மூலம் நிர்க்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது.

உதாரணமாக:-

(ஏற்றுமதி மானியம், விலை ஆதாரவு வழிமுறை) யைக் குறிப்பிடலாம். சேவைத் துறை குறிப்பாக வங்கி, காப்புறுதி, தொலைத் தொடர்பு, உசாத்துணை, திரைப்படம் போன்றவையும் இதன் கீழ் வந்தமை, வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை, கட்டுப்பாடற்ற வர்த்தகம் போன்ற பலவும் இணைந்து வர்த்தகம் சாராத போராட்டங்களை மேற்கொள்ள வர்த்தகத்தை ஒரு ஆயுதமாகப் பயன் படுத்தும் நடைமுறைகளானது வளர்ந்த நாடுகளுக்குச் சாதகமாக அமைகின்றது. இந்த வகையில் இலங்கையும் ஒரு வளர்முக நாடு என்ற ரீதியில் இந்த உடன்படிக்கை மூலம் பெறக்கூடிய நன்மைவிட இழப்புக் களே கூடுதலாக அமையும் எனின் தவறா காது. ஏனெனில் இலங்கை அதிகளவுக்கு இறக்குமதியில் தங்கியிருக்கும் ஆடை ஏற்று மதியில் பெருமளவுக்குத் தங்கி இருக்கின் றமையைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக இறுதியாக நடைபெற்ற உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முடிவுற்றதைத் தொடர்ந்து இந்த உடன்பாட்டின் மறு வடிவமாக 1995 ஜனவரியில் இருந்து உலக வர்த்தக நிறுவனம் என்ற பெயருடன் ஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உலக வர்த்தக நிறுவனம் ( World Trade Organisation – WTO )

சர்வதேச ரீதியில் பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்புமுகமாக உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் மிகக் கடைசியாக அறிமுகப்படுத்தப்பட்டதே உலகவர்த்தக நிறுவனம் ஆகும். 1986 – 1991 இற்குப் இடைப்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பிரதிபலனாக 1995 ஜனவரி 16-ந் திகதியன்று இந்த உலக வர்த்தக நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் அமெரிக்கா உட்பட 130 இற்கு மேற்பட்ட நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. இந்த உலக வர்த்தக நிறுவனத்துடன் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவும் இணைந்து செயலாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். உலக நாடுகளுக்கிடையே வர்த்தகக் கட்டுப்பாடுகள், தடைகள் ஏற்படாமல் வர்த்தகம் சீராகவும், நியாயபூர்வமாகவும் நடைபெறவும் மிக ஏழை நாடுகளின் வர்த்தகத்தில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் உதவுவதே இதன் பிரதான நோக்கமாகும்.

இந்த உலக வர்த்தக நிறுவனத்தின் முக்கிய பணிகள் என்ற வகையில்

- உருகுவே மாநாட்டின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துதல்,
- உலக வியாபார விதிகளை நடைமுறைப்படுத்துதல்.
- அங்கத்துவ நாடுகளுக்கிடையில் பொருளாதார உறவுகளை வளர்த்தலும் அங்கத்துவ நாடுகளின் விவசாயம், கைத்தொழில், வெளிநாட்டுச் செலாவணி, புத்திஜீவித சொத்துரிமை ( Interlectual Property Rights ) தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துதல்,
- சுற்றுச் சூழலைப் பாதுகாத்தல்,
- நிதிச்சேவை, தொழில்நுட்பம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, கட்புல செவிப்புல காட்சிகளைத் தாராளமாக்குதல் போன்ற பலவற்றை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச ரீதியாக பொருளாதார வர்த்தகத் தொடர்புகள் சம்பந்தமான ஒப்பந்தங்களை அமுல்படுத்துவதில் பலம் பொருந்திய ஒரு அமைப்பாக இது உள்ளது. இந்த நிறுவனம் நியாயபூர்வமான வியாபார முறையை நாடுகளிடையே அறிமுகம் செய்வதுடன் சிறிய நாடுகளின் பலவீனத்தில் வளர்ந்த நாடுகள் நன்மை பெறும் நிலையைக் கட்டுப்படுத்தவும் உதவிவருகின்றது.

மேற்படி உலக வர்த்தக நிறுவனம் (WTO) ஸ்தாபிக்கப்பட்டு வருங்காலத்தில் எழக்கூடிய சச்சரவுகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்தியிருக்கின்றார்கள். இதற்கு TRPM (Trade Policy Review Mechanism) என்பது 1989 இல் இருந்து நடைமுறையில் இருந்தாலும் வருங்காலத்தில் 2 வருடங்களுக்கொரு முறை கூடும் Ministers Conference ஒப்பந்தங்களையும் நாடுகளுக்கிடையில் உள்ள ஏற்பாடுகளையும் பரிசீலனை செய்யக்கூடியதாக இருக்கும். மேலும் ஒரு குறிப்பிட்ட நாடு ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த மறுக்கும் சந்தர்ப்பத்தில் அதனிடமிருந்து நட்டஈட்டினைப் பெறக்கூடியதாக இருக்கும்.

இத்தகைய உலக வர்த்தக நிறுவனத்தின் செயற்பாட்டால் உலக ரீதியில் ஏற்படக்கூடிய பலாபலன்கள் என்ற வகையில் முக்கியமாக

- இறுப்புக் (Tariff) குறைவடையும்.
- தொழிற் பொருட்களின் அளவு தொடர்பான கட்டுப்பாடுகள் நீங்கும். (உ+ம்:- துணிவகைகள், மோட்டார்கள்.)
- இறக்குமதித் தடைகள் நீங்கும் அல்லது குறைவடையும்,
- விவசாயப் பொருட்களுக்குக் கொடுக்கும் மானியம் போன்றவையால் உலக ஏற்றுமதி 2005 அளவில் 25% கூடும் என்றும் 1990 இன் விலைகளின் படி உலகிற்கு இதனால் 500 பில்லியன் ஸ்ரேலிங் பவுண் அளவு கூடிய வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு பல நன்மைகளைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற இந்த உலக வர்த்தக நிறுவனமானது தனது கொள்கைகளை அடைந்து கொள்வதில் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும். இந்த வகையில் முக்கியமான சவால்கள் என்றவகையில்

- அமெரிக்காவும் ஏனைய கைத்தொழில் நாடுகளுக்கும் ஆதரவான அமைப்பாக இதனை மாற்றும் முயற்சிகள் காணப்படுகின்றமை, உதாரணமாக 1996 இல் டிசம்பர் மாதம் சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாட்டில் இவ்வாறான ஒரு போக்கு அவதானிக்கப்பட்டது.
- ஜப்பானின் பொருட்களின் விற்பனை அதிகரித்தமையைத் தொடர்ந்து ஜப்பான்மீது கட்டுப்பாடுகளை விதிக்க உலக வர்த்தக நிறுவனத்தை அமெரிக்கா நாடியமை,
- கியூபா நாட்டிற்கெதிராக அமெரிக்கா 34 ஆண்டுகளாக விதித்திருந்த வர்த்தகத் தடையை 1996 இல் ஹெம்ஸ் பார்டன் சட்டத்தின்மூலம் அதனை மேலும் இறுக்கமாக்கியுள்ளமை, அதாவது கியூபாவுடன் வர்த்தகம் செய்தால் அமெரிக்க நீதிமன்றம்மூலம் நடவடிக்கை எடுக்கப்படலாம் எனக் குறிப்பிட்டுள்ளமை ஒருபுறம் அமைய இந்தச் சட்டம் செல்லாது என அறிவிக்குமாறு ஐரோப்பிய யூனியன் உலக வர்த்தக நிறுவனத்தைக் கேட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவை போன்ற பல சவால்களை இந்நிறுவனம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே இன்று உலக வர்த்தகத்தில் முக்கியம்பெறுகின்ற அமெரிக்காவும், ஜப்பானும், மற்றும் ஐரோப்பிய நாடுகளும் எந்தளவுக்கு உலக வர்த்தக நிறுவனத்தின் சட்டவாக்கத்தை ஏற்று நடக்கின்றதோ அதில்தான் உலக வர்த்தக நிறுவனத்தின் வெற்றி தங்கியுள்ளது. எனவே இந்த நாடுகள் (அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய) இச்சட்டவாக்கத்தை எவ்வளவு தூரம் ஏற்றுநடக்கப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

ஆகவே GATT அமைப்பின் உருகுவே சுற்றுப் பேச்சுக்கள் நீண்டகாலம் (சுமார் 07 வருடங்கள்) நீடித்ததோடு வியாபாரத்தைத் தாராளமயமாக்குகின்ற முதன்மை நோக்கத்தினை ஐக்கிய அமெரிக்காவினாலும் ஏனைய கைத்தொழில் நாடுகளினாலும் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் புரியாதவையாகவும் சிக்கலானவை

யர்களும் காணப்பட்டதால் இதுபற்றி தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இப்பேச்சுக்கள் தம்மீது எடுத்து வரக்கூடிய தாக்கங்கள் பற்றியும் தெளிவற்ற அச்ச உணர்வோடு இருந்த வளர்முக நாடுகள் தயக்கத்தின் மத்தியிலும் பங்கேற்குமாறு தூண்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தொடர்ந்து நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வெற்றி தராத பட்சத்தில் வர்த்தகத்தில் சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு என்ற ஒன்று இருந்துவர இடமுள்ளது என்றும் இதன் விளைவாக வலியவர்கள் மட்டுமே உயிர்வாழக்கூடிய நிலையை உருவாக்கிவிடும் என்பதனையும் உணர்த்தப்பட்ட நிலையில் பேச்சின் இறுதி உடன்பாடாக வேலைகளிலான (தொழில்களிலான) வர்த்தகத்தையும், சர்வதேச முதலீடுகளையும் தாராளமயப்படுத்தி வேளாண்மைத்துவ முறையிலும், பொருள் உற்பத்தித்துறையிலும் அறிவுசார் சொத்துக்களைப் பாதுகாக்கும் என்று கருதி மேற்படி சகல விடயங்களையும் 1995 ஜனவரி மாதம் ஸ்தாபிக்கப்பட்ட உலக வர்த்தக நிறுவனமானது உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றுடன் மிகவும் நெருக்கமாக இணைந்து செயலாற்றுவதன் மூலம் உலக வர்த்தகத்தைத் திறமையாக நிர்வகிக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ள அதே நேரம் இன்றைய உலகில் வர்த்தகத்தில் முக்கிய ஆதிக்கம் செலுத்துகின்ற அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் வர்த்தகம் தொடர்பாகக் கடைப்பிடிக்கும் கொள்கைகளிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளமையால் உலக வர்த்தக நிறுவனத் (WTO) தின் செயற்பாட்டின் விளைவினைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.


Reference :

1. Theory and Problems of International Economics
   Third edition - 1990  Dominick Salvatore

2. International Economics,
   Kindleberger and Lindert  Six edition - 1978

3. A Level Economics, Ray Powell, - 1995, Page - 317

4. News Survey January February - 1997  Volume - 17, No. 01
   Ananda Abayaratna  Page - 23
   "GATT - Uruguay Round; "Impact on the Spice Trade"

5. பொருளியல் நோக்கு மலர் - 20, இதழ் 08 நவம்பர் 1994
   இதழ் 09 டிசம்பர் 1994
   "அமைப்பும் உலக வளர்முக நாடுகளும்"
   கலாநிதி ஜே. பி. கஜேபா.